181—

பின்தங்கிய வட்டம்

***9353—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் வட்டத்தைப் பின்தங்கிய வட்டமாக அறிவிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிகவரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் வட்டத்தைப் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டயபுரம் ஒரு சரித்திரப் புகழ்பெற்ற இடமாகும். அந்தப் பகுதியிலே கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக சரியான பருவமழை பெய்யாத காரணத்தினால், விவசாயிகள் பெரிதும் பாதிப்பு அடைந்துள்ளார்கள். அதேபோல், அந்தப் பகுதியிலே குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. அரசு தொழிற்சாலைகள் அந்தப் பகுதியில் தொடங்கப்படவில்லை. குறிப்பாக, தீப்பெட்டித் தொழில் நசிவடைந்து வருகிற காரணத்தினால் அத்தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களும் அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களும் பாதிப்பு அடைந்துள்ளார்கள். அதன் காரணமாக அந்தப் பகுதியைப் பின்தங்கிய வட்டமாக அறிவிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள முன்வருகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை நிலை எண் 423, தொழில் துறை, நாள் 7-7-1989-ல் 105 வட்டங்கள் தொழிலில் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டன. அரசாணை நிலை எண் 500, தொழில் துறை, நாள் 14-5-1990-ல் மேலே குறிப்பிட்ட 105 வட்டங்களிலிருந்து

2002 ஏப்ரல் 19]

30 வட்டங்கள் தொழிலில் மிகவும் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டன. அரசாணை நிலை எண் 41, தொழில் துறை, நாள் 18-3-1996-ல் வட்ட வாரியாக இல்லாமல் ஊராட்சி ஒன்றியங்கள் வாரியாக தொழிலில் மிகவும் பின்தங்கிய, பின்தங்கிய பகுதியாக அறிவித்து அரசாணை வெளியிடப்பட்டது. இந்த அரசாணையின்படி 71 ஊராட்சி ஒன்றியங்கள் தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய பகுதிகளாகவும், 216 ஊராட்சி ஒன்றியங்கள் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன. இவ்வாணையின்படி ஒரு பகுதியை தொழிலில் மிகவும் பின்தங்கிய, பின்தங்கிய பகுதியாக அறிவிக்க கீழ்க்கண்ட குறியீடுகள் உள்ளன. மிகவும் பின்தங்கிய பகுதியில் உள்ள தொழிற்சாலைப் பணியாளர்களின் எண்ணிக்கை சதவீதம். இந்த ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மொத்த மக்கள்தொகையைக் கணக்கில் கொள்ளும்போது 0.25 சதவீதம் அல்லது அதைவிடக் குறைவாக இருத்தல் வேண்டும். அப்பகுதியில் நடுத்தர, பெரும் தொழில்களில் முதலீடு ஏதும் செய்யப்பட்டிருக்கக்கூடாது. அதேபோன்று பின்தங்கிய பகுதிக்கு, இப்பகுதியிலுள்ள தொழிற்சாலைப் பணியாளர்களின் எண்ணிக்கை சதவீதம், அந்த ஊராட்சி ஒன்றியத்தின் மொத்த மக்கள் தொகையில் மாநில சராசரி சதவீதமாகிய 2 சதவீதத்துக்குக் குறைவாக இருத்தல் வேண்டும். மேலும், இப்பகுதியில் நடுத்தரப் பெரும் தொழில்களில் செய்யப்பட்டுள்ள முதலீடு ரூபாய் 15 கோடிக்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

மேற்கண்ட விதிகளின்படி புதிதாகப் பிரிக்கப்பட்ட எட்டயபுரம் வட்டத்திலுள்ள கயத்தாறு யூனியன் பகுதியையும் சேர்த்து கிராமப் பஞ்சாயத்திலுள்ள சோழபுரம், சன்னக்கட்டை, பொன்களந்தான்நத்தம், மேற்குப்பட்டி ஆகிய நான்கு கிராமப் பஞ்சாயத்துகள் தொழிலில் பின்தங்கிய பகுதிகளாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளன. எனவே, தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் வட்டம் முழுவதையும் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை. மேலும், உறுப்பினர்கள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க ஊராட்சி ஒன்றியங்கள் வாரியாக தொழில் தொடங்குவதற்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகள் நல்கினால் அதுகுறித்து அரசு சிந்திக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 182, திரு. எம். சக்திவேல் முருகன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.